**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**மற்றும்**
**இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை**
**சார்ந்த வேளாண் அறிக்கை**
**சென்னை மாவட்டம்**
**(24.04.2024 முதல் 28.04.2024 வரை)**
**அறிக்கை**

**அறிக்கை எண் : 033/2024** **தேதி: 23.04.2024**

**மாநிலத்தில் கடந்தவாரவானிலை:**

சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் கடந்த ஐந்து நாட்களாக வானம் தெளிவாக காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை 35.0-37.0 செல்சியஸ் மற்றும் 29.0-30.0 செல்சியஸ் என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 66-72 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 04-06 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**சென்னை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | ஆய்வுக் கூறுகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18.04.2024 | 19.04.2024 | 20.04.2024 | 21.04.2024 | 22.04.2024 | தேதி | 24.04.2024 | 25.04.2024 | 26.04.2024 | 27.04.2024 | 28.04.2024 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 36 | 36 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 37 | 38 | 38 |
| 29 | 29 | 30 | 29 | 29 | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | 28 | 28 | 28 | 27 | 28 |
| 70 | 63 | 72 | 70 | 69 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (°செ) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 68 | 66 | 72 | 72 | 70 | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் % | 50 | 60 | 50 | 60 | 60 |
| வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | மேக மூட்டம் (அக்டா) | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்று வரும் திசை | தெற்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு |
| 4 | 4 | 6 | 6 | 6 | காற்றின் வேகம் கி.மீ/மணி | 14 | 16 | 16 | 18 | 18 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (24.04.2024-28.04.2024)**

சென்னை மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் வரும் வாரத்தில் வானம் தெளிவாக காணப்படும் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37.0-38.0 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்ப நிலை 27.0-28.0 டிகிரி செல்சியஸ் ஆகவும் காற்றின் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச ஈரப்பதம் முறையே 80 % மற்றும் 50-60 % ஆக பதிவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. சராசரி காற்றின் வேகம் 14-18 கி.மீ ஆகவும் பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்

<u>குறுஞ்செய்தி:</u>

(24.04.2024-28.04.2024) ஆகிய நாட்களில் தமிழகத்தின் சில பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2-4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கும்.

கால்நடை ஆலோசனைகள்:

1. வெப்ப அயர்ச்சியை தடுக்க கால்நடைகளை குறிப்பாக கறவை மாடுகளை மதிய வேளைகளில் மேய்ச்சலுக்கு அனுப்புவதை தடுக்க வேண்டும்.
2. அதிக உற்பத்தி திறன் உள்ள கலப்பின கறவை மாடுகள் வெப்ப அயர்ச்சியால் பாதிப்படைந்து பால் உற்பத்தி குறையும். அதனை தடுக்க நீர் தெளிப்பான் கருவியை கொட்டகையில் பொருத்தி பயன்படுத்த வேண்டும்.
3. கறவை மாடுகளுக்கு கோடை காலத்தில் நீர்ச்சத்து உள்ள பசும் தீவனங்களை அளிக்க வேண்டும். எனினும் மொத்த தீவன உலர்ப்பொருள் அளவு பார்த்துக்கொள்ள வேண்டும். 7-8 விழுக்காடு உடல் எடைக்கு குறையாமல்
4. வெப்ப அயர்ச்சியால் எருமைகளில் வெயில்கால மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே வெப்பத்தை குறைக்க கொட்டகையில் நல்ல காற்றோட்ட வசதி செய்து தர வேண்டும்.
5. முயல்களில் வெப்ப அயர்ச்சியை தடுக்க 1 லிட்டர் தண்ணீருக்கு 1 நெல்லிக்காய் என்ற விகிதத்தில் கொடுத்தால் வெப்ப அயர்ச்சி குறைய வாய்ப்புள்ளது.
6. சோடியம் கார்போனேட் போன்ற உப்புகளை 0.25% அளவு நீரில் கலந்து முட்டை கோழிகளுக்கு கொடுக்க வேண்டும்.
7. கோடை காலத்தில் கோழிகளின் உணவு உட்கொள்ளும் திறன் குறையும் எனவே உணவு கொடுக்கும் போது 4-5 தடவைகளாக பிரித்து கொடுக்கலாம்.

வேளாண் ஆலோசனைகள்: .

1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

   தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.

   அறுவடைக்கு தயாராக உள்ள நெற்கதிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும்.

   நெல் நாற்று வயலில் மண் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், தரமான நாற்றுகள் வளர்வதற்கும் அசோஸ்பைரில்லம் 2.5 கிலோவை 25 கிலோ மணல்/மண்ணுடன் கலந்து இட வேண்டும்.

2. கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பென்டாசிம் 1.0 கி/லி என்ற அளவில் தெளிக்கலாம்.

கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த T N A U கரும்பு பூஸ்டரை கரும்பு நட்ட 45,60 மற்றும் 75 வது நாட்களில் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ 1.5 கிலோ மற்றும் 2 கிலோ வீதம் முறையே 200 லிட்டர் தண்ணீரில் தேவையான ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

3. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள்/பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது.

அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும்.

முதன்மை அலுவலர் (GKMS)
பேராசிரியர் மற்றும் தலைவர்
கால்நடை உற்பத்தி மேலாண்மை துறை
சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி
சென்னை–7.